www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Ramanujam Tuition Centre - Patteeswaram

Thiruvarur (DT) Question Paper

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி | பகுதி - I ( மதிப்பெண்கள் : 8 ) | மதிப்பெண்கள் : 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 8 x 1 = 8

1. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ________.
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
2. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்?
   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனித நேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
3. இருநாட்டு அரசர்களும் தும்பை பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________.
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
4. மேன்மை தரும் அறம் என்பது ________.
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.
   இ) புகழ் கருதி அறம் செய்வது.
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.
5. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ________.
   அ) காலம்மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாதுஅறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
6. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

*பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி (7,8 )*

"கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது."

7. அடி எதுகையை எழுதுக.
   அ) உள்வாய், உடம்பு ஆ) கொள்வோர், உள்வாய்
   இ) கொள்க, குரைக்க ஈ) உடம்பு, தொடாது
8. இலக்கணக்குறிப்புஎழுதுக: கொள்க, குரைக்க.
   அ) வினையெச்சம் ஆ) வியங்கோள் வினைமுற்று
   இ) உரிச்சொல் ஈ) தொழிற்பெயர்

### பகுதி - II ( மதிப்பெண்கள் : 10 )

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10
*(16 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)*

9. *விடைக்கேற்ற வினாஅமைக்க.*
   அ. 1942 - ஆகஸ்டு எட்டாம் நாள் இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.
   ஆ. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும்.
10. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச்சான்று தருக.
11. ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக. மயிலாப்பூர், நாகப்பட்டினம், சைதாப்பேட்டை
12. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
13. புறத்திணைகளில் எதிரெதிர்த்திணைகளை அட்டவணைப்படுத்துக.
14. *கலைச்சொல் தருக :* BELIEF, RENAISSANCE, DOCUMENT, GUILD
15. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
16. "வினை" - என முடியும் திருக்குறளை எழுதுக.

Scanned with ACE Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – III ( மதிப்பெண்கள் 9 )

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 3 x 3 = 9

17. அ) தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

*(அல்லது)*

ஆ) ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி***

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி..

i) இப்பத்தியில் சிறுமை எனக் குறிப்பிடப்படுவது எது?
ii) தமிழர்க்கு அழைப்பு விடுத்தவர் யார்?
iii) இப்பத்தியில் இடம்பெற்றுள்ள மூவேந்தர்கள் யாவர்?

18. அ) முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்? *(அல்லது)*

ஆ) ***அடிபிறழாமல் எழுதுக.***

"தூசும் துகிரும்" *(அல்லது)* "மாற்றம்" - எனத் தொடங்கும் பாடல் எழுதுக.

19. அ) அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான் அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக. *(அல்லது)*

ஆ) அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. - இக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு தருக

## பகுதி - IV ( மதிப்பெண்கள் : 15)

IV. அனைத்துவினாக்களுக்கும்விடையளிக்க. 3 x 5 = 15

20. அ) சிலப்பதிகார மருவூர்ப் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. *(அல்லது)*

ஆ) ***குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம்எழுதுக.***

மாணவன் - கொக்கைப்போல, கோழியைப்போல - உப்பைப்போல - இருக்கவேண்டும் - கொக்குகாத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி-கண்ணுக்குத் தெரியா விட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம்-மாணவன் மகிழ்ச்சி.

21. அ) நாளிதழ் ஒன்றின் - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. *(அல்லது)*

ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்கு பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

22. அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



*(அல்லது)*

ஆ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எழுதுக.

## பகுதி – V ( மதிப்பெண்கள் 8)

V. வினாவிற்கு விரிவாகவிடையளிக்க. 1 x 8 = 8

23. அ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக. *(அல்லது)*

ஆ) "மங்கையராய்ப் பிறப்பதற்கே" மகளிர்நாள்விழா நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

*******

Scanned with ACE Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com